[8th September 1958

Sri R. KRISHNASAMI NAIDU : ராமநாதபுரம் ஜில்லா, ராமநாதபுரம் தாலூகாவில் மண்டபப் பகுதிகளில் உள்ள காடுகளில் இத்தகைய குதிரைகள் இருக்கின்றன. அவைகளையும் அபிவிருத்தி செய்ய ஏதாவது திட்டம் அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அப்படி குதிரைகளை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஒன்றும் இப்பொழுது அரசாங்கத்தினிடம் இல்லை. முதலில் வேதாரண்யத்தில் உள்ள கொடிக்காட்டில் உள்ளதை என்ன செய்யலாம் என்பதை பரிசீலனை செய்து அங்கு ஏதாவது செய்யலாமா என்று பார்த்த பிறகுதான் மீதியுள்ளவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

Sri A. A. RASHEED : Sir, is there any proposal to start horse racing in Tanjore district to breed horses?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : These are ponies. These are not fit for races.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, குதிரை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஒருவிதமான திட்டமும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால், குதிரைப் பந்தயத்தை நடத்துவதால் குதிரைகளை அபிவிருத்தி பண்ணுவதாக ஆகாதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : குதிரைப் பந்தயத்தில் உபயோகப்படும் குதிரைகளை ராணுவத்திற்கு பயன்படுத்த அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

Fertilizers.

* 100-BB *Q.*—Sri P. S. K. LAKSHMIPATHI RAJ (on behalf of Sri S. Lazar) : Will the Hon. the Minister for Home be pleased to place a statement on the Table of the House as to the demand and supply position of fertilizers in the State for the year 1958–59 and the steps taken by the Government to keep up agricultural production from the point of view of proper manuring of agricultural lands?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

Libraries

* 100-CC *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா ?

(அ) சென்னை ராஜ்ய இந்துமத அறநிலைய போர்டின் ஆதிக்கத்திலிருக்கும் எத்தனை கோவில்களிலும், தர்ம ஸ்தாபனங்களிலும் இலவச வாசகசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) மேற்கண்ட இலவச வாசகசாலைகளுக்கு ஜில்லா லைப்ரரி அத்தாரிடி மூலம் உபகாரத் தொகை கொடுக்கப்பட்டு வருகின்றனவா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Ninety-one temples and five maths.

(*b*) No, Sir.

Sri P. G. MANICKAM : ஸார், இந்த கோவில்களில் இருக்கும் வாசக சாலைகளின் அபிவிருத்திக்காக லைப்ரரி அத்தாரிட்டிகளிடமிருந்து உதவி பெறுவதற்கு அரசாங்கம் ஒரு முறையை ஏற்படுத்துமா ?

---

[a] Printed as Appendix I on pages 383–384 infra.

8th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: லைப்ரரி அத்தாரிடிகள் மூலம் பல இடங்களில் நூல் நிலையங்கள் அமைத்து நடத்தப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் இருக்கும் நூல் நிலையங்கள் பிரத்யேகமாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நூல் நிலையங்களுக்கு லைப்ரரி அத்தாரிட்டியிடமிருந்து உதவி நாட வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகின்றது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இப்பொது இருக்கின்ற முறைப்படி எல்லா ஆலயங்களிலும் மடங்களிலும் நூல் நிலையங்கள் முறையாக அமுல் நடத்தப்பட்டு வருகின்றனவா? அவைகளின் எண்ணிக்கை என்ன? நடத்தப்படவில்லையென்றால் முறையாக நடத்தப்படுவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது தான் நான் கணக்கு கொடுத்தேன். இத்தனை ஆலயங்களிலும் சரியாக நூல் நிலையங்கள் பராமரிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுதான் வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI,: தலைவர் அவர்களே, ஆலயங்களிலும் மடங்களிலும் நடத்தப்பட்டு வருகிற நூல் நிலையங்களில் மதங்களை குறைகூறுகிற நூல்கள் இருக்கக்கூடாது என்பதற்கு ஏதாவது சட்டங்கள் இருக்கின்றனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்காக தனிச்சட்டங்கள் ஒன்றுமில்லை. பொதுவாக நல்ல நூல்கள் வைத்திருக்கவேண்டும் என்று அமைக்கப்பட்டு வருகிறது.

SRI A. V. P. ASAITHAMBI: தலைவர் அவர்களே, அறநிலையங்களின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுகிற வாசக சாலைகளில் ஆபாசங்களைப் பரப்பும் புராண ஏடுகள் இருக்கின்றனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நல்ல நூல்கள் வைக்க வேண்டும் என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. JAGANNATHAN: May I know whether in these temple libraries, only religious books are maintained or books dealing with all branches of human knowledge are also kept?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that it is not merely the so-called religious books that are maintained in these libraries.

SRI P. G. MANICKAM: இந்து மத அற நிலையத்தின் கீழ் இருக்கின்ற எல்லா கோவில்களிலும் ஒவ்வொரு வாசக சாலை ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவ்விதம் நடத்துவதற்கு பொருள் நிலையையும் கவனிக்கவேண்டும். எல்லா கோவில்களிலும் ஒரு வாசகசாலை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. பொருள் வசதிக்காக நன்கொடைகள் பெற்று இம்மாதிரி வாசக சாலைகள் ஏற்படுத்தலாம். இதற்கு இட வசதிவேண்டும். இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன.

SRI K. R. VISWANATHAN: தலைவர் அவர்களே, இந்த அற நிலைய நூல் நிலையங்களிலுள்ள புத்தகங்கள் சரியாக பயன்படுத்த பட்டு வருகின்றனவா? தோராயமாக இந்த நூல் நிலையத்திலிருந்து எத்தனை பேரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை. இவற்றை சரிவர பயன்படுத்தவதற்கு கனம் அங்கத்தினர்களைப் போன்றவர்கள் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டால் நல்ல பலனைக் காணமுடியும் என்று நம்புகிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தலைவர் அவர்களே மதசம்பந்தமான நூல்களை ஆபாச புராணங்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது அவரவர்களுடைய கருத்து.

Tanks

*100-DD *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) போளுர் தாலூகா காள சமுத்திரம் கிராம மக்களிடமிருந்து ஏரி தூர்வார வேண்டுமென்று மகஜர் வந்ததா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Superintending Engineer (Food Production) has been asked to look into the matter.

SRI S. M. ANNAMALAI : இந்த ஏரியானது 10, 15 வருடங்களாக இதே நிலையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அங்கு நஞ்சை நிலங்களாக இருந்தவை எல்லாம் புஞ்சை நிலங்களாக மாறிக் கொண்டுவருகின்றன. ஆகவே விரைவில் இந்த வேலையை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வப்போது விவசாயிகள் அந்த வண்டலை அகற்றியிருக்கவேண்டும். தொடர்ந்தாற்போல் அகற்றாமல் இருந்ததினால் இது தூர்ந்து போயிருக்கிறது. இதனால் அதிகம் செலவு ஏற்படும். இருந்தாலும் இதை உணவு உற்பத்தி இலாகா கவனித்து வருகிறது

Cattle farms

*100-EE *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken by the Government to encourage cattle and sheep farming in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement showing the action taken by Government to encourage cattle and sheep farming in this State is placed on the table of the House.

Public meeting.

*100-FF *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether permission has been refused to Sri S. Pakkirisami Pillai for holding a public meeting in the Pensioner's Lines on 23rd June 1958, 24th June 1958 and 25th June 1958; and

(*b*) the reasons for such refusal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Government understand that the Commissioner of Police did not receive any application from the Honourable Member for holding a public meeting in the Pensioner's Lines on the dates specified. The question of the Commissioner of Police having refused permission for holding the meeting does not therefore arise.

---

* Printed as Appendix II on pages 384-387 infra.